1979 பிப்ரவரி 13]

திருச்சியில் உள்ள தேவர் ஹாலைப் புதுப்பித்தல்.

*வினா எண். 29—திரு சி. மாணிக்கம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திருச்சியில் உள்ள தேவர் ஹாலைப் புதுப்பிக்கும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு கா. காளிமுத்து: இதுபற்றிய திட்டம் ஒன்று திருச்சி நகராட்சியின் பரிசீலனையில் இருக்கிறது. இது இன்னும் அரசுக்கு வரவில்லை.

மதுரையில் பாதாளப்பாதை அமைப்பு.

*வினா எண் 30—திரு என். கிட்டப்பா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மதுரை பேருந்து நிலையம் அருகே பாதாளப் பாதை அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:

(அ) ஆம்.

(ஆ) இத் திட்டம் ஒருங்கிணைக்கப்பட்ட நகர அபிவிருத்தி திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்போகும் ஒன்றாகும்.

திரு. என். கிட்டப்பா: இந்தத் திட்டத்திற்கான மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு? இதைப்போல் மதுரை நகராட்சி மதுரை மாநகராட்சியாக்கப்பட்ட பிறகு அங்கு ஏற்பட்டிருக்கும் போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்காக இன்னும் எவ்வளவு இடங்களில் நமது மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பொறுப்பெடுத்து இம்மாதிரியான பாலங்களை அமைக்க முன்வருவார்கள்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: இந்தத் திட்டமே கூட ஒருங்கிணைக்கப்பட்ட நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வருகிறது. மதிப்பீட்டுத் தொகை ரூ. 42 லட்சம். மற்றவை பற்றி தனியாகப் பரிசீலிக்கலாம்.

திரு. என். கிட்டப்பா: மதுரைப் பெருநகர் திட்டத்திற்கு உலக வங்கியில் உதவி கிடைப்பதாகத் தெரிகிறது. ஆமெனில் அந்தத் தொகை எவ்வளவு? இந்தப் பாலத்திற்கு அந்தத் தொகை பயன்படுத்தப்பட்டதா?